வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 25.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- அயோத்தியில், ராமர் கோவில் கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டதை குறிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கோவில் வளாகத்தில், காவிக் கொடி ஏற்றி வைத்தார்.

- அனைவரையும் உள்ளடக்கிய முன்னேறிய இந்தியாவை உருவாக்க, மக்கள், ஒருவரை ஒருவர் அரவணைத்துப் பாடுபட வேண்டும் என, பிரதமர் கேட்டுக் கொண்டார்.

- மகளிர் அதிகாரப் பங்கேற்பு குறித்த, தேசிய அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரத்தை, மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

- புதுச்சேரியில், S-I-R கணக்கெடுப்புப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கும் பணிகள், 95.94 சதவிகிதம் முடிந்து விட்டதாக, இன்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

---------------------

*மோடி அயோத்தி 1 (7)*

உத்தரபிரதேஷ் மாநிலம் அயோத்தியில், ராமர் கோவில் கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டதை குறிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கோவில் வளாகத்தில், காவிக் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். தர்ம துவஜம் என்னும் இக்கொடி, இந்திய பாரம்பரியத்தின் மறுமலர்ச்சியை குறிப்பதாகவும், பொய்மைக்கு எதிராக, உண்மைதான் வெல்லும் என்பதற்கு சாட்சியாகவே, இப்புனிதக் கொடி

திகழும் என்றும், அவர் தமது உரையில் கூறினார். பிரதமரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

மோடி அயோத்தி 2 (13)

(வாய்ஸ்)

அயோத்தியில் ராமர் கோவில் கட்டி முடிக்கப் பட்டுள்ளதால், 500 ஆண்டு வலிக்கும்-வேதனைக்கும், தற்போது தீர்வு கிடைத்து இருப்பதாக, பிரதமர் தெரிவித்தார். ஆன்மீகம்-நவீனம் ஆகிய இரண்டும் சங்கமிக்கும் நகரமாக, வரவிருக்கும் ஆண்டுகளில் அயோத்தி மேம்பட்டு, விக்சித் பாரத் என்னும் முன்னேறிய இந்தியாவின் முதுகெலும்பாகத் திகழும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஜனநாயகம், இந்தியாவின் மரபணுவிலேயே, பொதிந்து இருப்பதாக குறிப்பிட்ட அவர், விளிம்புநிலை மக்கள் உட்பட, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் வளர்ச்சிக்கு, அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாகவும், பகவான் ஸ்ரீராமரைப் போலவே, தமது அரசுக்கு, எவர் மீதும் பாரபட்சம் கிடையாது என்றும் தெரிவித்தார். முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதில், மக்கள் அனைவரும், ஒருவரை ஒருவர் அரவணைத்துப் பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மோடி அயோத்தி 3 (15)

ராமர்-சீதை விவாக பஞ்சமி தினமான இன்று, அயோத்தியில் நடைபெற்ற கொடியேற்ற வைபவத்தில், நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கிலான ராம பக்தர்கள், பக்தி பரவசத்துடன் கலந்து கொண்டனர்.

21 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டதாக, ராமர் கோவில் கோபுர உச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஏற்றி வைத்த காவிக் கொடியில், ராம ராஜ்யத்தின் தர்ம பரிபாலனம் மற்றும், சுபிட்சத்தைக் குறிக்கும்

வகையில், பாரம்பரியச் சிறப்புமிக்க மந்தாரை மரத்தின் சித்திரமும், ஓம் என்ற எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

கொடியேற்ற நிகழ்வுக்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சாலை பவனியாக அயோத்தி ராமர் கோவிலுக்கு வந்தபோது, சாலையின் இருமருங்கிலும், பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கூடி நின்று, பிரதமரை உற்சாகமாக வரவேற்றனர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கோவில் வளாகத்தில் உள்ள சப்த மந்திர், மற்றும், சேஷாவதார மந்திர், மற்றும், அன்னபூர்ணா மந்திரில் வழிபாடு நடத்திய பின்னர், ராம் லல்லா கருவறையிலும், பூஜை செய்து வழிபட்டார்.

---------------------

மோடி குருத்ஷேத்ரா (11)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை, ஹரியானா மாநிலம் குருத்ஷேத்ரா சென்று, குரு தேஜ் பகதூரின் 350ஆவது தியாக தின விழாவில் கலந்து கொள்கிறார். தேஜ் பகதூர் நினைவு தபால் தலை, மற்றும் நாணயத்தையும், விழாவின் போது அவர் வெளியிடுகிறார்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கையில் உள்ள சங்கைப் போன்ற வடிவத்தில், குருத்ஷேத்ராவில் கட்டப் பட்டுள்ள பாஞ்சஜன்யா கட்டிடத்தை, பிரதமர் இப்பயணத்தின் போது திறந்து வைக்கிறார். அர்ஜுனனுக்கு, பகவத் கீதை போதிக்கப்பட்ட இடமாக கருதப்படும் பிரம்ம சரோவரத்தில், அவர் பூஜை செய்து வழிபடுகிறார். குருத்ஷேத்ராவில் தற்போது நடைபெறும் சர்வதேச கீதா மகோத்சவத்தை ஒட்டியதாக, பிரதமரின் குருத்ஷேத்ரா பயணம் அமைகிறது.

---------------------

*கோயல்-வர்த்தகம் (15)*

நாட்டில் 29 தொழிலாளர் சட்டங்கள் எளிமையாக்கப்பட்டு, 4 சட்டங்களாக தொகுக்கப் பட்டுள்ளதால், காகித நடைமுறைகளும், ஒப்புதல் தேவைகளும், குறையும் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், தேசிய வர்த்தகத் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், தேசிய அளவில் குறைந்தபட்ச கூலி விகிதங்களுக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும், பணியிடப் பாதுகாப்பு, மற்றும் சமூக பாதுகாப்பு உதவிகளை உறுதிப் படுத்துவதாகவும், 4 புதிய தொழிலாளர் சட்டங்கள் அமைந்து இருப்பதாக கூறினார். நாட்டில் வர்த்தகம் புரிவதையும், மக்களின் வாழ்வையும் எளிதாக்கும் நோக்கிலான 3ஆம் கட்ட ஜன் விஸ்வாஸ் மசோதாவில், சட்டக் கட்டுப்பாடுகள் தொடர்பான சுமார் 300 விதிமுறைகள் நீக்கப்படும் என எதிர்பார்க்கப் படுவதாக, அமைச்சர் தெரிவித்தார். உள்ளாட்சி, மற்றும் மாநில அரசு நிலையில், ஒழுங்குமுறை விதிகளின் அமலாக்கத்தை சீர்படுத்தும் வகையில், வணிகர்களுக்கான ஒற்றை லைசென்ஸ் முறை ஒன்றை, முன்னோடித் திட்டமாக அமல்படுத்தவும், அரசு பரிசீலித்து வருவதாக அவர் கூறினார்.

---------------------

*திரைப்பட விழா* (11)

கோவாவில் நடைபெறும், 56ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், இன்று, பெரும் எண்ணிக்கையிலான திரைப்பட ரசிகர்கள், மறைந்த நடிகர் தர்மேந்திராவுக்கு அஞ்சலி செலுத்தினர். தர்மேந்திரா உடனான தமது நினைவுகளை, திரைப்பட இயக்குநர் ராகுல் ராவைல், இந்நிகழ்ச்சியின் போது பகிர்ந்து கொண்டார். முன்னதாக, திரைப்பட இயக்குநர் ஜிகர் நக்டா, தயாரிப்பாளர் ஜிதேந்திர மிஷ்ரா ஆகியோர், Whispers of the Mountain என்னும் தங்களின், சுற்றுச் சூழல் விழிப்புணர்வு திரைப்படத்தை விழாவில் அறிமுகப் படுத்தினர். இன்றைய தினம் திரைப்பட விழாவில், The Last Viking, Black Rabbit-White Rabbit

உள்ளிட்ட திரைப்படங்களும், இயக்குநர் தபன் சின்ஹாவின் புகழ்பெற்ற, ஏக் டாக்டர் கி மவுத் திரைப்படமும் திரையிடப் படுகின்றன.

--------------------

*ஷிவ்ராஜ் 1* (5)

சர்வதேச மகளிர் வன்முறை தடுப்பு தினமான இன்று புதுடெல்லியில், ஆண்-பெண் சமத்துவம், மற்றும், மகளிர் அதிகாரப் பங்கேற்பு குறித்த, தேசிய அளவிலான, 4ஆம் கட்ட விழிப்புணர்வு பிரச்சாரத்தை, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான் தொடக்கி வைத்தார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

*ஷிவ்ராஜ் 2* (15)

(வாய்ஸ்)

மாற்றங்களை தொடக்குவதற்கான புதிய விழிப்புணர்வு என்ற தலைப்பில், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள பிரச்சார இயக்கம், அனைத்து மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட உள்ளது. தொடக்க விழாவில், அமைச்சர் திரு. சௌகான் பேசுகையில், பாலின சமத்துவம் என்பது, இந்தியக் கலாச்சாரத்தின் ஆன்மாவே தவிர, வெறும் முழக்கம் அல்ல என்றும், பெண்கள் அதிகாரம் பெற்றால்தான், சமுதாயம் அதிகாரம் பெற இயலும் என்றும், அவர் கூறினார். இந்தியாவின் முன்னேற்றத்தில், பெண்கள் வெறும் பங்களிப்பாளர்கள் அல்ல என்றும், முன்னேற்றத்தை முன் நின்று வழிநடத்துவதே, பெண்கள்தான் என்றும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறினார். நாட்டில் அண்மையில் அமலுக்கு வந்துள்ள, புதிய தொழிலாளர் சட்டங்களால், சம வேலைக்கு சம ஊதியம் பெறும் உரிமை பெண்களுக்கு கிடைக்கும் என்றும், பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பு உறுதியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

--------------------

S-I-R (11)

12 மாநிலங்கள், மற்றும் யூனியன் பிரதேசங்களில், S-I-R கணக்கெடுப்புப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கும் பணிகள், 99.16 சதவிகித அளவிற்கும், படிவங்களை திரும்பப் பெற்று, தரவுகளை டிஜிட்டல் மயமாக்கும் பணிகள், 56.34 சதவிகித அளவிற்கும் முடிந்து விட்டதாக இன்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இப்பணிகள் முறையே, 95.94 சதவிகித அளவிற்கும், 65.42 சதவிகித அளவிற்கும் பூர்த்தியாகி உள்ளன. புதுச்சேரியில் மொத்தம் வழங்கப்பட வேண்டிய சுமார் 10.21 லட்சம் S-I-R படிவங்களில், சுமார் 9 லட்சத்து 80 ஆயிரம் படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, இதில் சுமார் 6 லட்சத்து 68 ஆயிரம் படிவங்களின் தரவுகள் டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப் பட்டுள்ளன.

---------------------

*ரங்கசாமி கபடி* (7)

டாக்காவில் நடைபெற்ற, உலக கோப்பைக்கான மகளிர் கபடி இறுதிப் போட்டியில், அபாரமாக ஆடி வெற்றி பெற்றுள்ள இந்திய மகளிர் அணியினருக்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். பெண்களின் ஆற்றல், திறமை, மற்றும், துணிச்சலை வெளிப்படுத்தும் வகையில் இந்த வெற்றி அமைந்து இருப்பதாகவும், விளையாட்டுத் துறையில் மேலும் பல பெண்கள் சாதிக்க தூண்டுதலாக இந்த வெற்றி அமையும் என்றும், முதலமைச்சர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

---------------------

*கிரிக்கெட்* (8)

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, குவஹாத்தியில் நடைபெறும், 2ஆவது, மற்றும் இறுதி டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, இந்திய அணி தனது 2ஆவது இன்னிங்சில், 2 விக்கெட் இழப்பிற்கு, 27 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, தென்னாப்ரிக்க அணி, 5 விக்கெட் இழப்பிற்கு 260

ரன் எடுத்து இருந்த நிலையில், தனது 2ஆவது இன்னிங்ஸ் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் விவரம்-

தென்னாப்பிரிக்கா – 489 ரன்

இந்தியா – 201 ரன்

---------------------

*வானிலை (20)*

இன்று குமரிக் கடல், மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாகவும், அதற்கடுத்த 24 மணி நேரத்தில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெறக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும்,நாளையும், நெல்லை, குமரி, தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், கடலோர தமிழகம், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், மணிக்கு 40 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என்றும், எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்றும், ஏற்கனவே ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள், உடனடியாக கரை திரும்பவும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில், தலா 17 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 செ.மீ மற்றும், காரைக்காலில் 3 செ.மீ மழை பெய்துள்ளது.

---------------------

*ஏனாம் (5)*

சர்தார் பட்டேலின் 150ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக, மேரா யுவ பாரத் சார்பில், ஏனாமில் இன்று நடைபெற்ற ஒற்றுமை அணிவகுப்பை, மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார், கொடியசைத்து தொடக்கி வைத்தார். மாணவர்கள் எல்லா நிலைகளிலும், தங்களின் திறமைகளை நிரூபிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

---------------------

*எரிமலை விமானம் (11)*

எத்தியோப்பியாவில், ஹேலி குப்பி எரிமலை வெடிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மேல் பயணிக்க வேண்டிய பல்வேறு விமானங்களை, ஏர் இண்டியா நிறுவனம் ரத்து செய்துள்ளது. விமானங்கள் பறக்கப் பாதுகாப்பானதாக, வான் பரப்பு உள்ளதா என்பது குறித்து, விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதாகவும், பயணிகளுக்கு, மாற்று வழிப் பயணம் அல்லது, தங்குமிட வசதிக்கு ஏற்பாடுகள் செய்யப் படுவதாகவும், ஏர் இண்டியா நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, இன்றைய தினம், சென்னை-மும்பை விமான சேவைகளும், மும்பை வழியாக செல்ல வேண்டிய விமான சேவைகளும், ரத்து செய்யப்பட்டுள்ளன, அல்லது, தள்ளி வைக்கப் பட்டுள்ளது. லண்டன் - சென்னை விமான சேவைகளும், குறைந்தபட்சம் 3 மணி நேரம் தாமதமாகி உள்ளன.

---------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அயோத்தியில், ராமர் கோவில் கட்டுமானப் பணிகள் முடிந்து விட்டதை குறிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கோவில் வளாகத்தில், காவிக் கொடி ஏற்றி வைத்தார்.

அனைவரையும் உள்ளடக்கிய முன்னேறிய இந்தியாவை உருவாக்க, மக்கள், ஒருவரை ஒருவர் அரவணைத்துப் பாடுபட வேண்டும் என, பிரதமர் கேட்டுக் கொண்டார்.

மகளிர் அதிகாரப் பங்கேற்பு குறித்த, தேசிய அளவிலான விழிப்புணர்வு பிரச்சாரத்தை, மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌகான், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில், S-I-R கணக்கெடுப்புப் படிவங்களை வாக்காளர்களுக்கு வழங்கும் பணிகள், 95.94 சதவிகிதம் முடிந்து விட்டதாக, இன்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது